## Kavadisindhu – காவடிச்சிந்து

| | |
|---|---|
| நூல் | காவடிச்சிந்து |
| ஆசிரியர் | சென்னிகுளம் அண்ணாமலையார் |

### நூற்குறிப்பு

- சிந்து என்பது பல்லவி , அனுபல்லவி, சரணம் என்ற மூன்று உறுப்புகளைக் கொண்ட இசைப்பாடு
- சரணத்தில் பல கண்ணிகள் இடம் பெறும்
- கண்ணிகள் மட்டுமே "சிந்து" என்று கூறப்படும்
- காவடிச்சிந்து நூல் கண்ணிகளால் அமைந்த "சிந்து" என்ற சிற்றிலக்கிய வகையைச் சார்ந்தது ஆகும்.
- பெரும்பாலும் காவடி எடுத்தக்கொண்டு போகும்போது பாடல் பாடுவதால் காவடிச்சிந்து எனப் பெயர் பெற்றது
- காவடிச்சிந்து என்ற இலக்கிய வகையை முதன் முதலில் பாடியவர் சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார்.
- பெற்றோர் சென்னவர் – ஓவுஅம்மாள்
- காலம் 1861 – 1890
- தமிழில் முதன் முதலில் வண்ணச்சிந்து பாடியதால் "காவடிசிந்தின் தந்தை" எனப் போற்றப் பெற்றார்.
- திருநெல்வேலிக்கு அருகே உள்ள கழுகுமலையில் எழுந்தருளியிருக்கும் முருகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட நூல்.
- ஊற்றுமலைச் ஜமீன்தார் இருதாலய மருதப்பதேவர் கழுகுமலை முருகனுக்கு காவடியெடுத்த போது வழியில் பாடும் பொருட்டு இயற்றப்பட்ட நூல்
- இந்நூலில் 24 பாடல்கள் உள்ளன.
- பாரதி, பாரதியார், கண்ணதாசன் போன்றோர் காவடிச்சிந்து மெட்டில் பாடல்கள் புனைந்துள்ளனர்.


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- இராமாயணத் திருப்புகழ்க் காவடிச்சிந்து , அரிசந்திரன் திருப்புகழ்க் காவடிச்சிந்து, தேவடிச்சிந்து, பூவடிச்சிந்து போன்ற பிற நூல்களும் உள்ளன.
- பூவடிச்சிந்து என்பது அசன்அலிப்புலவர் இயற்றிய இஸ்லாமிய நூல்
- அண்ணாமலை ரெட்டியார் வீரை அந்தாதி , கோமதி அந்தாதி , வீரைப் பிள்ளைத்தமிழ் ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.

## மேற்கோள்

புள்ளிக் கலாபமயிற் பாகன் – சக்தி
புதல்வனான கன யோகன் – மலை
போலத்தான் திரண்ட
கோலப் பன்னிரண்டு வாகன்
நல்விவேகன்

வள்ளிக்கிசைந்த முருகேசன் – அண்ணா
மலைக்கவிராசன் மகிழ் நேசன் – என்றும்
வாழும் கழுகுமலை
வாவி வளம் சொல்லுவேன் மாதே
கேள் இப்போதே!


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in